அரசாங்க நிருவாக சுற்றறிக்கை
இல: 2/ 97 (1)

எனது இல: 1/ 543/ ச/ 01/21
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.
1997-04-30

எல்லாச் செயலாளர்களுக்கும் திணைக்களத்
தலைவர்களுக்கும்.

# 1997 சம்பள மீளமைப்பு

1997-01-15ஆந் தேதிய 2/97 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் பின்வருமாறு திருத்தப் -படுகின்றது.

## 1 சம்பளத் தொகுதிகளும் சம்பள அளவுத்திட்டங்களும்.

1.1 பின்னிணைப்பு 1இல் குறிப்பிட்டுள்ள ரீ.10-3-2 சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு திருத்தப்படுவதுடன் இத்துடன் இணைத்துள்ள மீளமைப்பு அட்டவணை பின்னிணைப்பு 111இல் உள்ளடக்கப்பட வேண்டும்.

ரூபா. 179520-10X 8160-261120

1.2 பின்னிணைப்பு 1 இன் ரீ 10-2 1 சம்பளத் தொகுதிக்கு அடுத்து பின்வரும் சம்பளத் தொகுதி உள்ளடங்க வேண்டியதுடன் இத்துடன் இணைத்துள்ள மீளமைப்பு அட்டவணை பின்னிணைப்பு 111இல் உள்ளடக்கப்பட வேண்டும்.

| சம்பளத் தொகுதி | 1997 புதிய சம்பள அளவுத்திட்டம் |
|---|---|
| ரீ 10-2-2 | ரூபா 107160-3X 2700-4X 4080 5X 5520-159180. |

1.3. பின்வரும் பதவிகள்-தரங்கள் பின்னிணைப்பு 11 இல் உள்ளடங்க வேண்டும்.

| **கோவை பதவி** | **சம்பளத் தொகுதி.** |
|---|---|
| பல் சிகிச்சை மருத்துவர் வகுப்பு 1 | ரீ-10-3-1 |
| வகுப்பு 11 | ரீ-10-2-2. |

2. படிகள்

1. 3.1 ஆம் பந்தியின் (ஏ) (ஐ) மற்றும் (ஓ) பந்திகள் நீக்ககப்படுவதுடன் அவற்றில் குறிப்பிட்டுள்ள படிகள் 1997 புதிய சம்பளங்களுடன் இணைக்கப்படாததாகக் கருதவேண்டும்.

2 பட்டநிலைப்படிப்புப் பட்டத் தகைமைகளைக் கொண்டுள்ள மருத்துவ நிருவாகத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3000/-மான நிருவாகப் படி யொன்றாக தொடந்தும் கொடுபட வேண்டும். பட்ட நிலைப்படிப்புப் பட்டத்தகைமைகளைக் கொண்டிராத மருத்துவ நிருவாகத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூ 2500/-ஆன படி தற்போது வழங்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு மட்டும் வரையறுத்தல் வேண்டும். அவர்களுக்கு 1997-12-31 ஆந் திகதி வரை சலுகைக் காலம் வழங்கப்படுவதுடன் அந்தத் திகதிக்குப் பின் அந்த 2500/-ரூபா படி நிறுத்தப்பட வேண்டும்.

2.3 3.2 ஆம் பந்தியும் நீக்கப்படுவதுடன் ரூபா 3000/--ஆன போக்குவரத்துப் படியை படியொன்றாக தொடர்ந்தும் கொடுபட வேண்டும். எரிபொருட் படி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 1997-01-01 ஆந் திகதி தொடக்கம் இந்தப் போக்குவரத்துப்படியை பெறுவதற்கு உரித்துக் கிடையாது.

2.4. 3.4ஆம் இலக்கப் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்படுகிறது.

அரசதுறையில் வழங்கப்படும் மற்றைய படிகள் மற்றும் ஊக்குகை படிகள் என்பவற்றை மீண்டும் கவனத்திற் கொண்டு பார்ப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. மேற்படி குழுவினால் அந்தப்படிகள் கவனத்திற் கொண்டு பார்க்கும்வரை இந்தப் படிகளை 1996-12-31 ஆந் திகதியில் இருந்தவாறான நிதிப்பெறுமானத்தில் நிறுத்திவைக்க வேண்டும்.

2.5. 3.4 ஆம் இலக்க பந்திக்கு அடுத்து பின்வரும் பந்தி உள்ளடங்க வேண்டும்.

' 3.5 இந்தப் பந்தியின் கீழ் குறிப்பிட்டுள்ள படிகள் சுகாதாரச் சேவையின் மருத்துவ உத்தியோகத்தர்களின் சேவை பிரமாணக் குறிப்பின்படி பல் சிகிச்சை வைத்தியர்களுக்கும் ஏற்புடையதாகும்.'

3. <u>நாட்சம்பளம்/விசேட படிகள்.</u>

பயிலுநர் வைத்திய உத்தியோகத்தர்களுக்காக 1997-01-01 ஆந் திகதி தொடக்கம் ரூபா 8075/- உம் 1998-01-01ஆந் திகதி தொடக்கம் ரூபா 9000/- உம் இணைந்த படியாக வழங்கப்படும். சுற்றறிக்கையின் IV ஆம் பின்னிணைப்பு அதன்படி திருத்தப்பட வேண்டும்.

04. சுற்றறிக்கையின் பின்வரும் திருத்தங்களையும் குறித்துக் கொள்ளவும்.

(1) 64ஆம் பக்கத்தின் சம்பள அளவுத் திட்டத்தை

ரூபா 45900-14 X 1320-6 X 1560-73740 ஆக செவ்வைப்படுத்தப்பட வேண்டும்

(11) 75 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டம் 3-2-1 க்கு ஏற்புடைய மீளமைப்பு அட்டவணை இசுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு 111 இன் படி செவ்வைப்படுத்தப்பட வேண்டும்.

05. பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம். (ஆர் எஸ். ஜயரத்ன)
செயலாளர்.
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.